நகராட்சி அலுவலகம்,
விக்கிரமசிங்கபுரம்.
நாள் : 23 .12 .2022

**சாதரணக் கூட்டம்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மன்றத்தின் சாதாரண கூட்டம் எதிர்வரும் **2022ம்** வருடம் டிசம்பர் மாதம் **28ம்** தேதி **புதன் கிழமை** காலை 10.30 மணிக்கு **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதாரணகூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்:1**

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 22083/2022/ SBM2 நாள் 13.12.2022 ன் படி நகர்பகுதிகளில் சேகரமாகும் குப்பைகளை பிரித்து எடுத்தல் வேண்டி, Material Recovery Facilities அமைக்க நிதி ஒதுக்கீடு செய்து, பணி மேற்கொள்ள திட்டக்கருத்துரு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் மேற்கண்ட பணி மேற்கொள்ள ரூ.43.00 இலட்சம் கீழ்க்கண்ட விவரபடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இந்நகர்பகுதியில் Material Recovery Facilities மையம் அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூஇலட்சத்தில்) | மத்திய அரசு மான்யம் (ரூஇலட்சத்தில்) | மாநில அரசு மான்யம் (ரூஇலட்சத்தில்) | நகராட்சி பங்குத் தொகை (ரூஇலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 6வது வார்டு கட்டபொம்மன் காலனி பகுதியில் Material Recovery Facilities அமைத்தல் | 43.00 | 21.00 | 14.00 | 8.00 |

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளப்படி , விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் Material Recovery Facilities அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.43.00 இலட்சத்தில், மத்திய அரசு மான்யமாக ரூ. 21.00 இலட்சத்திற்கும், மாநில அரசு மான்யமாக ரூ. 14.00 இலட்சம் மற்றும் இந்நகராட்சி பங்குத் தொகையாக ரூ. 8.00 இலட்சத்திற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதை , ஏற்று நகராட்சி பங்களிப்புத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மைன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 200 / சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளப்படி, பணி மேற்கொள்ளவும், நகராட்சி பங்களிப்புத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்:2**

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 35132/2022/ CFC-1 நாள் 12.10.2022 ன் படி நகர்பகுதிகளில் மக்கள் நலவாழ்வு மையம் (Urban Health & Wellness Centre) அமைக்க வேண்டி, 15 வது நிதி க்குழு மான்யம் 2022–23 ன் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து , பணி மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன் படி விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட விவரப்படி மக்கள் நலவாழ்வு மையம் (Urban Health & Wellness Centre) அமைக்க ரூ. 25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூஇலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் மக்கள் நலவாழ்வு மையம் (Urban Health & Wellness Centre) அமைத்தல் | 25.00 |

அலுவலகக்குறிப்பு

சென்னை நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளப்படி , 15 வது நிதிக்குழு மான்யம் 2022–23 ன் வழிகாட்டு நெறிமுறைகளின் படி, பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 201 / 15வது நிதிக்குழு மான்யம் 2022–23 ன் வழிகாட்டு நெறிமுறைகளின் படி, பணிகள்மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்:3**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் குடிநீர் திட்ட நிதி 2022–23 கீழ், கீழ் கண்ட பணிகள் செய்து முடிப்பதற்கு 23.12.2022 ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள ஓப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ எண் | பணியின் பெயர் | ஓப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பொதிகையடி துாய நீரேற்று நிலையத்தில் வடிகட்டி படுக்கையில் பழுதுகளை சரிசெய்யும் பணி<br>மதிப்பீடு 5.00 இலட்சம் | திரு. கே. ராஜா<br>ஒப்பந்தகாரர்,<br>விக்கிரமசிங்கபுரம் | 0.5ரூ<br>மதிப்பீட்டை<br>விட குறைவு |
| | | திரு. கோசலைராமன்<br>ஒப்பந்தக்காரர்<br>திரிகூடப்புரம் | 0.99ரூ<br>மதிப்பீட்டை<br>விட அதிகம் |

(ந.க.எண்: )

அலுவலகக்குறிப்பு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. கே. ராஜா , ஒப்பந்தகாரர், விக்கிரமசிங்கபுரம் அவர்களின் ஓப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 202 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண்:4

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது நிதி 2022–23 கீழ், கீழ் கண்ட பணிகள் செய்து முடிப்பதற்கு 23.12.2022 ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளின் ஓப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள ஓப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ எண் | பணியின் பெயர் | ஓப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 1 முதல் 21 வரை வாறுகாலில் மேல் உள்ள சிதிலமடைந்த இரும்பு மூடிகள் மாற்றம் செய்யும் பணி<br>மதிப்பீடு 3.30 இலட்சம் | திரு. கே. ராஜா<br>ஒப்பந்தகாரர்,<br>விக்கிரமசிங்கபுரம் | 0.49ரூ<br>மதிப்பீட்டை<br>விட குறைவு |
| | | திரு. கோசலைராமன்<br>ஒப்பந்தக்காரர்<br>திரிகூடப்புரம் | 1.48ரூ<br>மதிப்பீட்டை<br>விட அதிகம் |

(ந.க.எண்: )

அலுவலகக்குறிப்பு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. கே. ராஜா , ஒப்பந்தகாரர், விக்கிரமசிங்கபுரம் அவர்களின் ஓப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 203 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

பொருள் எண்:5

விக்கிரமசிங்கபுரம் நகராட்சியில் பொது நிதி 2022–23 கீழ், கீழ் கண்ட பணிகள் செய்து முடிப்பதற்கு 23.12.2022 ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தபுள்ளிகளின் ஓப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்டுள்ள ஓப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு

| வ எண் | பணியின் பெயர் | ஓப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 16 மேலரதவீதி சின்டெக்ஸ் தொட்டியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் வார்டு எண் 8 பசுக்கிடைவிளை பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்தல் மற்றும் வார்டு எண் 9 அகஸ்தியர்புரம் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பிடத்தில் பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளுதல்<br>மதிப்பீடு 2.70 இலட்சம் | திரு. ரமேஷ்குமார்<br>ஒப்பந்தகாரர்,<br>விக்கிரமசிங்கபுரம் | 0.41ரூ<br>மதிப்பீட்டை<br>விட குறைவு |
| | | திரு. கே. ராஜா<br>ஒப்பந்தகாரர்,<br>விக்கிரமசிங்கபுரம் | 1.57ரூ<br>மதிப்பீட்டை<br>விட அதிகம் |

(ந.க.எண்: )

அலுவலகக்குறிப்பு

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ரமேஷ்குமார் , ஒப்பந்தகாரர், விக்கிரமசிங்கபுரம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணி மேற்கொள்ள பணி உத்திரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 204 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்:6**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 16,வடக்கு ரதவீதியில் கதவு எண் 210/16 வீட்டில் குடியிருந்து வரும் திரு. எஸ்.மாரியப்பன் என்பவரின் விண்ணபத்தில் தனது வீட்டின் முன்புறம் அமைந்துள்ள வேம்பு மரத்தின் வேர்கள் வீட்டின் சுவற்றினை பாதிக்கும் வகையில் வேர்கள் பரவி, வீட்டிற்கு பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளதாகவும். மேற்கண்ட வேம்பு மரத்தினை வேருடன் பிடுங்கி வேறு இடத்தில் நடுவதற்கு அல்லது மரத்தினை வெட்டி அகற்றுவதற்கு, அம்பாசமுத்திரம் வட்டாச்சியர் அவர்கள் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு

மேற்கண்ட பொருளில் கண்டவாறு, வீட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ள வேம்பு மரத்தினை அகற்ற வேண்டி, அம்பாசமுத்திரம் வட்டாச்சியர் அவர்கள் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 205 / வட்டாச்சியர் அவர்கள் மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்:7**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியல் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குழு ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், இந்நகர் பகுதியில் உள்ள 10 எண்ணம் சமுதாய கழிப்பறைகளில் சுற்றுசுவர் பாசிப்பிடித்தும், கழிப்பறைகளில் உள்ள தொட்டிகள் மற்றும் கோப்பைகள் பழுதடைந்துள்ளதாகவும், அதனை உடன் சீரமைத்து, கழிப்பறைகளை பயன்பாட்டிற்கு கொண்டு வரவும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக , சுகாதார ஆய்வாளர் அவர்களால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் படி இந்நகராட்சி பகுதியில் அமையப்பெற்றுள்ள 10 சமுதாய கழிப்பறைகளிலும் உள்ள பழுதடைந்துள்ள கோப்பைகள், சுற்று சுவர் வண்ணம் பூசுதல், குடிநீர் மேம்படுத்துதல், கதவுகள் சரிசெய்தல் மற்றும் இதர மேம்பாடு செய்யும் பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சி பொறியாளர் மூலம் மதிப்பீடு தயார் செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் உள்ள 10 எண்ணம் சமுதாய கழிப்பறைகளில் உள்ள பழுதுகளை நீக்கி, மேம்பாடு செய்யும் பணியினை நகராட்சி பொறியாளர் அவர்களால் மதிப்பீடு தயார் செய்து அதன் அடிப்படையில் பணி மேற்கொள்ளவும், மதிப்பீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் பொது சுகாதாரம் அவசரம் மற்றும் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 206 / பொது சுகாதாரம் அவசரம் மற்றும் அவசியம் கரு மன்றம் அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்:8**

விக்கிரமசிங்கபுரம் நகராட் சி அலுவலகத்தில், நகர்மன்றத் தலைவர் மற்றும் பொது சுகாதார பிரிவு அறைகளில், கண்ணாடி கதவுகள் மற்றும் இதர பிரேம் வேலைகள் செய்ய வேண்டி, அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொண்டதற்கும், வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் கீழ்க்கண்டவாறு உள்ள ஒப்பு நோக்குப்பட்டியலை, மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்புதல் வழங்கியமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | விஜயலெட்சுமி பிரேம் ஒர்க்ஸ் விக்கிரமசிங்கபுரம் | கா.ராஜா விக்கிரமசிங்கபுரம் | கோசலைராமன் ஒப்பந்தக்காரர் திரிகூடப்புரம் |
|---|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்ற தலைவர் மற்றும் சுகாதார ஆய்வாளர் அறையில் கண்ணாடி கதவுகள், அலுமினியம் பிரேம், கூலிங் பேப்பர், ஜன்னல் கதவுகள் பழுதுப்பார்த்தல் | சுஎ. 16210/– | சுஎ. 16350/– | சுஎ. 16500/– |

அலுவலகக்குறிப்பு

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள விஜயலெட்சுதி பிரேம் ஓர்க்ஸ் விக்கிரமசிங்கபுரம் என்பவரின் விலைப்புள்ளியை ஏற்று மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம், மேலும் பட்டியல் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 207 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**ஒம்/– திரு.எஸ்.செல்வசுரேஷ்பெருமாள்**
**நகர்மன்றத்தலைவர்**
**விக்கிரமசிங்கபுரம் நகராட்சி**

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/